முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் நாள் வியாழக்கிழமை

**இடைநிலை மனு எண்.08/2025**

**IN**

**அசல் வழக்கு எண்.239/2011**

1. வெள்ளத்தாய் (எ) பாப்பம்மாள் (இறப்பு)
2. பொன்னுத்தாய்
3. கருப்பசாமி
4. தங்கம்
5. சாந்தி .... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. மாரிமுத்து
2. முத்தையா
3. சொர்ணத்தாய்
4. நடராஜன்
5. முருகன்
6. முருகலட்சுமி
7. கோட்டைத்தாய்
8. பேச்சியம்மாள் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 08.01.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ரவிசங்கர் அவர்கள் ஆஜராகியும், 1, 2, 4 மற்றும் 5 வது எதிர்மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கில் தோன்றாத் தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.கோட்டூர்முருகன் அவர்கள் ஆஜராகியும், 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.வைரமுத்து அவர்கள் ஆஜராகியும் எதிருரை தாக்கல் செய்யாத நிலையிலும், 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவிற்கு Petition may be allowed on terms என குறிப்பாணை தாக்கல்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.01.22 17:28:41 +0530

செய்யப்பட்டுள்ள நிலையிலும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர்கள் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர்கள் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6, விதி 17, 18–ன்படி, அசல் வழக்கில் இதன் மனுவில் கண்ட சீர்திருத்த விபரப்படிக்கு சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்** :–

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் என்றும், 1ம் வாதியும், 2ம் வாதியும் சேர்ந்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கு நிலுவையில் இருந்துவரும் நிலையில் 6, 7, 8 பிரதிவாதிகள் தரப்பில் கடந்த 13.10.2025ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்ட வ.வி.எண்.7/2025 மனுவில் உறுதிக்கூற்றில் 6ம் பிரதிவாதி தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், இலுப்பையூரணியிலும், 7ம் பிரதிவாதி தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியிலும், 8ம் பிரதிவாதி தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்திலும் வசித்து வருவதாகவும், மனுதாரர்கள் தாக்கல் செய்த பிரதான வழக்கில் சங்கரன்கோவில் வட்டம், பெருங்கோட்டூர் கிராமத்தில் வசித்து வரவில்லை என்றும், வ.வி.எண்.7/2025 மனுவில் கண்ட விலாசத்தில் வசித்து வருவதாக கட்சி செய்துவருவதால் இவ்வழக்கில் பின்வில்லங்க விவகாரங்களை தவிர்க்கும் பொருட்டு பிரதான வழக்குரையினை இதன் மனுவில் கண்ட சீர்திருத்தப்படி சீர்திருத்தம்செய்து கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது என்றும், மேற்கண்ட சீர்திருத்தம் செய்வதால் இவ்வழக்கின் தன்மையோ, வழக்கு மூலமோ, எவ்விதத்திலும் மாறுபடக்கூடியதில்லை என்றும், எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட, நஷ்டமும் ஏற்படக்கூடியதில்லை என்றும், ஆகையால், அசல் வழக்கில் இதன் மனுவில் கண்ட சீர்திருத்த விபரப்படிக்கு சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.01.22 17:28:47 +0530

2) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

3) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர்கள் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

4) மனுதாரர்களால் இம்மனுவானது அசல் வழக்கில் இதன் மனுவில் கண்ட சீர்திருத்த விபரப்படிக்கு சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5) இவ்வழக்கு நிலுவையில் இருந்துவரும் நிலையில் 6, 7, 8 பிரதிவாதிகள் தரப்பில் கடந்த 13.10.2025 ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்ட வ.வி.எண்.7/2025 மனுவில் உறுதிக்கூற்றில் 6 ம் பிரதிவாதி தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், இலுப்பையூரணியிலும், 7 ம் பிரதிவாதி தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியிலும், 8 ம் பிரதிவாதி தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்திலும் வசித்து வருவதாகவும், மனுதாரர்கள் தாக்கல் செய்த பிரதான வழக்கில் சங்கரன்கோவில் வட்டம், பெருங்கோட்டூர் கிராமத்தில் வசித்து வரவில்லை என்றும், வ.வி.எண்.7/2025 மனுவில் கண்ட விலாசத்தில் வசித்து வருவதாக கட்சி செய்துவருவதால் இவ்வழக்கில் பின்வில்லங்க விவகாரங்களை தவிர்க்கும் பொருட்டு பிரதான வழக்குரையினை இதன் மனுவில் கண்ட சீர்திருத்தப்படி சீர்திருத்தம்செய்து கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கிறது என்று இம்மனுவில் மனுதாரர்களால் கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

6) மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு அசல் வழக்கின் வழக்குரையை சீர்திருத்தம் செய்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட, நஷ்டம் ஏற்படப்போவதில்லை. மேலும், 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்காமல் எதிருரை தாக்கல் செய்யாமல் 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரை 06.01.2026 ல் முடித்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவிற்கு Petition may be allowed on terms என குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.01.22 17:28:53 +0530

7) ஆகையால், இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

8) **இறுதியாக:–**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2026.01.22 17:28:59 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–** – இல்லை –

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2026.01.22 17:29:05 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,

I.A.No.08/2025
in
O.S.No.239/2011
உத்தரவு (Draft / Fair)
நாள் : 22.01.2026